Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 066 | வெள்ளிக்கிழமை Friday | 05.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# ரூ.18,600 கோடி முதலீடு; 8,200 பேருக்கு வேலைவாய்ப்பு

## முதலமைச்சர் விஜய் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்து



சென்னை: ரூ.18,600 கோடி முதலீட்டில் 8,200 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தமிழ்நாட்டில் எல் அண்ட் டி (லார்சன் & டூப்ரோ) நிறுவனம் மூன்று திட்டங்கள் மேற்கொள்வதற்கு தமிழக முதல்வர் விஜய் முன்னிலையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

முதல்வர்விஜய்தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், தொழில் துறையில் மேற்கொள்ளப்படும் முதல் புரிந்துணர்வு ஒப்பந்தம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான அரசு செய்திக் குறிப்பில், முதல்வர் ச.ஜோசப் விஜய்யை இன்று (4.6.2026) தலைமைச் செயலகத்தில் இந்தியாவின் மிகப்பெரிய பொறியியல்,கட்டுமானம்,உற்பத்தி மற்றும் தொழில்நுட்பக் குழுமங்களில் ஒன்றான லார்சன் & டூப்ரோ லிமிடெட் (Larsen & Toubro) நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்எஸ்.என்.சுப்ரமண்யன் சந்தித்து கலந்துரையாடினார்.

தமிழ்நாட்டில் இந்நிறுவனம் தொடர்ந்து முதலீடுகள் மேற்கொண்டு தொழில் துறையில் வலுவான தடம்பதித்துள்ளதையும், தமிழ்நாட்டில் பரவலாகவும்,வெவ்வேறு துறைகளில் மேலும் 18,600 கோடிரூபாய்முதலீட்டில் 8,200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மூன்று திட்டங்கள் அமைக்க முன்வந்துள்ளதையும் முதல்வர் பாராட்டினார்.

மேலும், தமிழ்நாட்டில் இந்நிறுவனத்தின் எதிர்கால வளர்ச்சி மற்றும் விரிவாக்கத் திட்டங்களுக்கு மாநில அரசின் முழுமையான ஒத்துழைப்பும், ஆதரவும் தொடர்ந்து வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

இந்த சந்திப்பின்போது, லார்சன் & டூப்ரோ லிமிடெட் (L&T) நிறுவனம், தமிழ்நாட்டில் பின்வரும் மூன்று திட்டங்கள் மேற்கொள்வதற்கு தமிழக முதல்வர் .ச.ஜோசப் விஜய் முன்னிலையில், தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது:

1. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 15,000 கோடி ரூபாய் முதலீட்டில் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தகவல் தரவு மைய விரிவாக்கத் திட்டம்.

2. கோயம்புத்தூரில் 2,500 கோடி ரூபாய் முதலீட்டில் 2,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மின்னணுப் பொருட்கள் மற்றும் மின்னணு அமைப்புகள் உற்பத்தித் திட்டம்.

3.திருவள்ளூர்மாவட்டத்தில், 1,100 கோடி ரூபாய் முதலீட்டில் 5,700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில்,காட்டுப்பள்ளி L&T கப்பல் கட்டும்தளம் விரிவாக்கத் திட்டம்.

2036–ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1.5 டிரில்லியன் டாலராக உயர்த்த வேண்டும் என்ற முதல்வரின் லட்சிய இலக்கினை எய்துவதற்கான முயற்சியின் மைல் கல்லாக அமைந்துள்ள பல்துறை சார்ந்த இம்முதலீடுகளின் மூலம், மாநிலத்தில் டிஜிட்டல் உள்கட்டமைப்புமற்றும்செயற்கை நுண்ணறிவுச்செயல்பாடுகள் வளர்ச்சி பெறுவதுடன், மின்னணுவியல் உற்பத்தி சூழலமைப்பு மேம்படும். மேலும் காட்டுப்பள்ளி திட்டம், கடலோர காற்றாலை கட்டுருவாக்கத் தொழிலுக்கு உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பைக் கொண்டுவரும்.

இத்திட்டங்கள் செயலாக்கப்படுவதன் மூலம் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு பெரிய அளவிலான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதுடன், மாநிலத்தின் பொருளாதாரமும் மேம்படும்.

முதல்வர்விஜய்தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், தொழில் துறையில் மேற்கொள்ளப்படும் முதல் புரிந்துணர்வு ஒப்பந்தம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், தொழில்துறை அமைச்சர்எஸ்.கீர்த்தனா,தலைமைச் செயலாளர் மு.சாய்குமார், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச. விஜயகுமார்,தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் பு. அலர்மேல்மங்கை, எல் & டி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் எஸ்.என்.சுப்ரமண்யன், முன்முயற்சிகள் மேம்பாட்டுப் பிரிவுத்தலைவர் கே.ஜி.சத்யநாராயணன் மற்றும்அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்துறை ஹார்டு டிஸ்குகள் திருடுபோன விவகாரம்

## அமைச்சர் நிர்மல்குமார் விளக்கம்



சென்னை: மின் துறை சார்ந்த ஹார்டு டிஸ்குகள் திருடு போனது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.இந்த விவகாரத்தில் யாரும் தப்பிக்க முடியாது என மின்சாரத் துறை அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "மின்துறை தலைமை அலுவலகத்தின் முக்கியமான துறைகளில் இருந்த ஒருசில ஹார்டு டிஸ்குகள் திருடப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டு கால ஒப்பந்தங்கள் குறித்த ஆவணங்கள் திருடப்பட்டுள்ளன.

ஒப்பந்த தொழிலாளர்களின் நியமனம் தொடர்பான ஆவணங்களையும் காணவில்லை. எத்தனை ஹார்டு டிஸ்க்குகள் திருடப்பட்டுள்ளஎன்பது குறித்த கணக்கெடுப்பு பணி நடைபெறுகிறது. தற்போது எதையும் தெரிவிக்க முடியாது. இதுதொடர்பான விசாரணை தீவிரமாக நடைபெற்று வருகிறது. எதனால் திருடப்பட்டன. அவர்களின் நோக்கம் என்ன? இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என முழுமையான விசாரணைக்கு முடுக்கிவிடப்பட்டுள்ளது. கடந்த மாதம் சிலரை பணியிடை நீக்கம் செய்தோம், அதன்பிறகு இது நடந்ததா என சந்தேகம் வருகிறது. இந்த விவகாரத்தில் யாரும் தப்பிக்க முடியாது.

செந்தில் பாலாஜி இருந்த காலத்தில் தான் டிரான்ஸ்பார்மர் ஊழல் நடந்தது. டிரான்ஸ்பா ர்மர் ஊழல் குறித்து விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மின் தடையை சீரமைக்க இன்னும் கால அவகாசம் வேண்டும். அனைத்தையும் சீரமைக்கஒருமாதகாலம் போதாது. மின்சார துறையில்கடன்இருக்கிறது; பணியாளர்கள் பற்றாக்குறை இருக்கிறது. கடந்த ஆட்சியில் பராமரிப்புப் பணிகள் சரியாக செய்யப்படவில்லை. மின்வெட்டு பிரச்சினையை சரி செய்ய பணிகள் நடைபெற்று வருகிறது" என்று கூறினார்.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்கியது

## வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

புதுடெல்லி: தென்மேற்கு பருவமழை கேரளாவில்(ஜூன் 4)தொடங்கியுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கு சாதகமான சூழல் அதிகரித்து வருவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் சமீபத்தில் கூறி இருந்தது. இந்நிலையில், கேரளாவில் தென்மேற்கு பருவமழை இன்று (ஜூன் 4) தொடங்கியுள்ளது. இதனால் மாநிலத்தின் பல பகுதிகளில் மழை பெய்யத் தொடங்கியுள்ளது. விவசாயிகளும், பொதுமக்களும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நாட்டின் பல பகுதிகளிலும் கோடை வெயில் வாட்டி வதைத்து வரும் நிலையில், தென்மேற்கு பருவமழை தொடங்கி இருப்பது வெயிலின் தாக்கத்தை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கேரளாவில் இன்று தொடங்கியுள்ள தென்மேற்குப் பருவமழை,



வழக்கம்போல் பல கட்டங்களாக வடக்கு நோக்கி நகர்ந்து ஜூலை 15தேதிக்குள் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழையை அளிக்கும். விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட இந்திய பொருளாதாரத்துக்கு பருவமழை மிகவும் முக்கியம் என்பதால் இதன் வருகை உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது. வேளாண் அமைச்சக தகவல்களின்படி நாட்டின் சாகுபடி நிலங்களில் கிட்டத்தட்ட 51% மழை நீரை நம்பியுள்ளன.நாட்டின் விவசாய உற்பத்தியில் 40% பங்களிப்பை இது வழங்குகிறது. நாட்டின் மக்கள்தொகையில் கிட்டத்தட்ட பாதி பேர் வாழ்வாதாரத்துக்காக விவசாயத்தை சார்ந்துள்ள தால் கிராமப்புற வருமானம் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளுக்கு பருவமழை மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. தென்மேற்கு பருவமழை, வழக்கமாக தொடங்கும் நாளில் இருந்து 3 நாட்கள் தாமதமாக தொடங்கி இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேற்கு பசுபிக் பெருங்கடலில் உருவாகி வரும் ஒரு புயல், லட்சத்தீவுக்கு அருகில் உள்ள ஒரு சூறாவளியின் சுழற்சி ஆகியவையே தாமதத்துக்குக் காரணம் என்று வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்கு பசுபிக் பெருங்கடலில் உருவாகி வரும் புயல், அரபிக் கடல் மற்றும் வங்காள விரிகுடா வில் இருந்து ஈரப்பதத்தை ஈர்த்துச் சென்றதாகவும், இதன் காரணமாகவே பருவமழை க்கான வாய்ப்பு தள்ளிப்போனதாகவும் வானிலை ஆய்வாளர்கள்கூறுகின்றனர்.

அடுத்த சில நாட்களுக்குகேரளாமுழுவதும் ஆங்காங்கே கனமழை முதல்மிககனமழைவரை பெய்யும் என்றும், தமிழ்நாடு மற்றும் கர்நாடகத்தின் சில பகுதிகளில் கனமழை பெய்யும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. இந்தியாவின் வடமேற்கு பகுதி, மத்திய பகுதி, கிழக்குப் பகுதி, தென்னிந்தியா ஆகிய பகுதிகளில் பலத்த காற்றுடன் இடியுடன் கூடிய மழை பெய்யவும் வாய்ப்புள்ளதாக வானி லை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்
DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# பெரியகுளத்தில் கலைஞர் கருணாநிதியின் 103வது பிறந்தநாள் பெரியகுளம் நகராட்சி சார்பில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி

தேனி மாவட்டம் பெரியகுளம் நகராட்சி வளாகத்தில், தமிழக முன்னாள் முதலமைச்சரும், திமுக முன்னாள் தலைவருமான முத்தமிழறிஞர் மு.கருணாநிதியின் 103-வது பிறந்தநாளை முன்னிட்டு, நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு அன்னதானம் வழங்கும்நிகழ்ச்சிசிறப்பாகத் தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தேனி நாடாளுமன்ற உறுப்பினர்தங்கதமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்றது.



இதில் சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார், நகர் மன்ற தலைவர் சுமிதா சிவகுமார் மற்றும் முக்கிய கட்சி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவின் மூலம் நகராட்சி வளாகத்திற்கு வருகை தந்த பணியாளர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளைப் பெரியகுளம்நகரதிமுகவினர் மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

## ஒரத்தி அரசு மேல்நிலைப் பள்ளியில் கோடை விடுமுறை முடிந்து

# பள்ளிக்கு வந்த மாணவ மாணவிகளுக்கு ஆசிரியர்கள் உற்சாக வரவேற்பு




தமிழகத்தில் 2025-26 கடந்த கல்வி ஆண்டில் பொது தேர்வுக்குபின்னர் கோடை விடுமுறை 40 நாட்கள் அளிக்கப்பட்டது.தமிழகபள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன்,


ஜூன் 1ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என அறிவித்திருந்தார். கோடை வெப்பத்தின் காரணமாகபள்ளிபள்ளி திறப்பது தள்ளி வைக்கப்பட்டு

இன்று ஜூன் 4-ம் தேதி பள்ளிகள் திறக்கப்ப ட்டன. செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள ஒரத்தி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் காலை முதலே பள்ளிக்கு மாணவ மாணவிகள் உற்சாகமாக வந்த வண்ணம் உள்ளனர்.

பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஆசிரியப் பெருமக்கள் ரோஜாப்பூ இனிப்புகள் எழுதுகோல் வழங்கி பள்ளி தலைமை ஆசிரியர் கிருஷ்ணகுமாரி. பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் மாறன். உதவி தலைமை ஆசிரியர் துரைமுருகன். செந்தில் வடிவு. பெற்றோர் ஆசிரியர் கழக பொருளாளர் மணி. ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கிருஷ்ணசாமி. வார்டு உறுப்பினர் சங்கர். உள்ளிட்ட ஆசிரியர்கள் மாணவர்களை வரவேற்றனர்.மேலும் பாடபுத்தகங்கள் அரசு சார்பில் வழங்கப்படும் பொருட்கள் வழங்க தயார் நிலையில் உள்ளது.

## கோவை அவினாசி சாலையில் உள்ள

# சிஐடி கல்லூரியில் சர்வதேச தூய்மை எரிசக்தி மற்றும் சுகாதார தொழில்நுட்பம் குறித்த மாநாடு தொடக்கப்பட்டது



கோவை அவினாசி சாலையில் உள்ள, சிஐடி கல்லூரியில் சர்வதேச தூய்மை எரிசக்தி மற்றும் சுகாதார தொழில்நுட்பம் குறித்த மாநாடு தொடக்க பட்டது. கோயம்புத்தூர் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் நார்வேயின் மேற்கு நார்வே பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் தூய்மை எரிசக்தி மற்றும் சுகாதாரப் பயன்பாடுகளுக்கான மேம்பட்ட பொருட்கள் தொடர்பான 4வது சர்வதேச மாநாடாக நடைபெற்றது..

கோவை அவினாசி சாலையில் உள்ள அரசினர் தொழில்நுட்ப கல்லூரியில்

ஜூன் 3 ம் தேதி முதல் 5ம் தேதி வரை, மூன்று நாட்கள் நடைபெறும் சர்வதேச தூய்மை எரிசக்தி மற்றும் சுகாதார தொழில்நுட்பம் குறித்த மாநாட்டின் துவக்க விழாவில், இந்தியா, நார்வே, இலங்கை, தென்கொரியா, இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்று, பொருட்கள் அறிவியல், சுத்தமான எரிசக்தி தொழில்நுட்பங்கள் மற்றும் சுகாதாரப் பயன்பாடுகள் தொடர்பான முன்னேற்றங்கள் குறித்து விவாதித்தனர்.

இந்த மாநாட்டை இந்திய அறிவியல் மற்றும் தொழில்துறைஆராய்ச்சி மன்றத்தின் இயக்குநர் ஜெனரல் டாக்டர் என். கலைச்செல்வி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, மாநாட்டு ஆய்வுக் கட்டுரைகள் தொகுப்பை வெளியிட்டு தொடக்க உரையாற்றினார்.

தொடக்க நிகழ்ச்சிக்கு சிஐடி கல்வி நிறுவனங்களின் தலைவர் மற்றும் தாளாளர் சந்தோஷ் மற்றும் நார்வேயின் ஹெச்விஎல் பல்கலைக்கழக பேராசிரியர், குன்னார்பிட்ரி ஆகியோர் தலைமை வகித்தனர்.சிஐடி முதல்வர் டாக்டர் அ. ராஜேஸ்வரி வரவேற்புரையாற்றினார். மாநாடு குறித்த அறிமுக உரையாற்றிய மாநாட்டு தலைவர் டாக்டர் தயாளன் வேலாயுதப்பிள்ளை, கல்வி மற்றும் ஆராய்ச்சி துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.ஹெச்விஎல் தற்போது இந்தியாவில் ஒன்பது கல்வி நிறுவனங்களுடனும், இலங்கையில் ஐந்து கல்வி நிறுவனங்களுடனும் இணைந்து செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். எதிர்கால எரிசக்தி சவால்களை எதிர்கொள்ள உலகளாவிய ஒத்துழைப்பு அவசியம் என்றும், இந்தியா மற்றும் நார்வே ஆராய்ச்சி கூட்டாண்மைகள் மேலும் வலுப்பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது



# மதுராந்தகம் அருகே அறப்பேடு கிராமத்தில் பொன்னியம்மன் ஆலய தேரோட்ட விழா

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள அறப்பேடு கிராமத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ ஆதி பொன்னியம்மன் ஆலயத்தில் மூன்றாண்டுக்கு ஒரு முறை தேரோட்டம் நடைபெறுவது வழக்கம் இந்த தேர் ஆனது 40 அடி உயரமும் 1008 பட்டுப் புடவைகளால் அலங்கரிக்கப்பட்டது கடந்த செவ்வாய்க்கிழமை அன்று காப்பு கட்டி விரதமிருந்த பக்தர்கள் மூன்றாம் நாளான இன்று மேளதாளங்களுடன் பழமை மாறாத தேரை தங்களது தோளிலே சுமந்தபடி ஊர் முழுவதும் சுற்றி வளம் வந்தனர்.

மேலும் நேர்த்திக்கடனாக பக்தர்கள் அலகு குத்தியும் உடல் முழுவதும் எலுமிச்சை பழத்தைக் குத்திக் கொண்டும் நேர்த்திக் கடனை செலுத்தினர் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## பந்தலூர் நூலகத்தில்

# இலவச மருத்துவ மற்றும் கண் பரிசோதனை முகாம்



பந்தலூர் முழுநேர கிளை நூலகத்தில் இலவச பொது மருத்துவம் மற்றும் கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், இந்திய செஞ்சிலுவை சங்க நடமாடும் மருத்துவக் குழு, பந்தலூர் முழுநேர கிளை நூலகம், அம்பேத்கர் மக்கள் இயக்கம் மற்றும் மகாத்மா காந்தி பொது சேவை மையம் ஆகியவை இணைந்து நடத்திய முகாமிற்கு பந்தலூர் கிளை நூலகர் நித்தியகல்யாணி தலைமை தாங்கினார். கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம், செஞ்சிலுவை சங்க கல்லூரி ஒருங்கிணைப்பாளர் செல்வகுமார்,பள்ளி ஒருங்கிணைப்பாளர் ஸ்டீவன்சன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சிலுவை சங்க மாவட்ட செயலாளர் மோரிஸ் சாந்தகுருஷ் முகாமை தொடங்கி வைத்தார்.

மருத்துவர் ஜேன் மார்டினெஸ் தலைமையிலான மருத்துவக் குழுவில் மருந்தாளுநர் நவீன், செவிலியர் கிரிஜா, நிர்வாக அலுவலர் லாய்சன் உள்ளிட்டோர் பங்கேற்று ரத்த அழுத்தம், ரத்த சர்க்கரை பரிசோதனை மற்றும் பொது மருத்துவ சிகிச்சைகளை வழங்கினர். தேவையானவர்களுக்கு இலவச மருந்துகளும் வழங்கப்பட்டன.

அதேபோல் கண் மருத்துவர் பிரவின், கண் தொழில்நுட்ப உதவியாளர்கள் ராபர்ட் மற்றும் பாக்யா ஆகியோர் கிட்டப்பார்வை, தூரப்பார்வை மற்றும் பிற கண் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

முகாமில் 150-க்கும் மேற்பட்டோர் மருத்துவ பரிசோதனை பெற்றனர். 15 பேர் கண்புரை அறுவை சிகிச்சைக்கும், 10 பேர் கண் அழுத்தம் (Glaucoma) சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டனர். 85 பேருக்கு கிட்ட பார்வைக்கான இலவச கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன, இலவச மருந்துகள் வழங்கப்பட்டன. முகாமிற்கான ஏற்பாடுகளை அம்பேத்கர் மக்கள் இயக்க நிர்வாகிகள் இந்திரஜித், முருகவேல், மகாத்மா காந்தி பொது சேவை மைய தலைவர் நௌஸாத்,நூலக உதவியாளர் சரஸ்வதி, போட்டித்தேர்வு மாணவர்கள் மற்றும் பலர் சிறப்பாக செய்திருந்தனர்



மதுரை திருப்ரங்குன்றம் தனக்கன்குளம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட அன்னதான நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பி ஆர் சி காலனி சாய்பாபா அன்னதான குழு சார்பில் இந்த அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பி நிர்மல்குமார், எம் பி மாயக்கண்ணன், வழக்கறிஞர் சமுத்திராபாண்டியன், ஜெயராமன், கோவில்பட்டி பாலா வேலு மற்றும் பலர் கலந்து கொண்டனர். விழா கமிட்டியார்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் இந்நிகழ்வில் ஆர்வமுடன் பங்கேற்றனர். இதுவே சமுதாயத்தில் ஒருமித்த உணர்வை வளர்க்கும் ஒரு முக்கியமான முயற்சியாக அமைந்தது.

# பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கும் கோவை தடாகம் சாலை, கோவில் மேடு புறக்காவல் நிலையத்தை அந்த பகுதியில் இருந்து எடுக்கப் வேண்டும்

## கோவை மாநகர காவல் ஆணையருக்கு மனு அளித்த தமிழக முற்போக்கு மக்கள் கட்சியினர்



கோவை தடாகம் சாலை சிவாஜி காலனி பகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின், கோவை மண்டல அலுவலகம் செயல்பட்டு வருகின்றது.

இக்கட்சியின் மாநில துணைத் தலைவராக வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இருந்து வருகின்றார். இவரது தலைமையில் கோவை மாநகர காவல் ஆணையர் கண்ணனை சந்தித்து, கோரிக்கை மனு ஒன்று வழங்கப்பட்டது. அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது..

கோவை மாவட்டம் தடகம் சாலை, கோவில் மேடு பேருந்து நிறுத்தம் அருகில்,சாய்பாபா காலனி காவல் நிலையத்திற்கு உட்பட்ட புறக்காவல் நிலையம் செயல்பட்டு வருகின்றது. இதன் அருகில் இரண்டு அரசு மதுபான கடைகள் செயல்பட்டு வருகின்றது. இந்த புறக்காவல் நிலையம், அருகே நான்கு சிசிடிவி கேமராக்கள் வைக்கப்பட்டுள்ளது. ஆயினும் இந்த பகுதியில், இன்று வரை எந்தவித குற்ற சம்பவமும் நடைபெறவில்லை. ஆயினும் இந்த புறக்காவல் நிலையத்தின் முன்பாக,மாலை 4 மணி முதல், இரவு 8 மணி வரை அனைவரின் வாகனத்தையும் நிறுத்த சொல்லி வாகன சோதனை என்ற பெயரில் பொதுமக்களுக்கு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர் காவல்துறையினர். சில நேரங்களில் வாகனங்களின் சாவிகளை பிடுங்கிக் கொண்டு இருசக்கர வாகனத்தில் செல்பவர்களை பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கியும் வருகின்றனர். இரண்டு மதுபான கடையின் அருகில் புறக்காவல் நிலையம் இருப்பதால், இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. எனவே இந்த பகுதியில் உள்ள இரண்டு மதுபான கடைகளை இடம் மாற்றம் செய்ய வேண்டும்,அல்லது இந்த புறக்காவல் நிலையத்தை இடமாற்றம் செய்ய வேண்டும், என குறிப்பிட்டுள்ளார் . மனுவை பெற்று கொண்ட உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அண்ணாமலையின் ராஜினாமா கடிதம் எதுவும் எனக்கு வரவில்லை: நயினார் நாகேந்திரன் பேட்டி



திருநெல்வேலி:பாஜகவில்இருந்துவிலகுவதற்கான அண்ணாமலையின் ராஜினாமா கடிதம் எதுவும் எனக்கு வரவில்லை என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார். அப்போது, அண்ணாமலைக்கு பிறந்த நாள்;அவர்புதியஅரசியல்கட்சிதொடங்கஇருக்கிறார் என செய்திகள் வருகின்றன; பாஜகவின் மாநில தலைவராக உங்கள் கருத்து என்ன என செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு பதில் அளித்த நயினார் நாகேந்திரன், "எனது அருமை சகோதரர் அண்ணாமலைக்கு இனிய பிறந்தநாள் நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் ஆரோக்கியத்தோடும், மகிழ்ச்சியோடும் இருக்க கடவுள் அருள வேண்டும்.

புதிய கட்சி தொடங்குவது குறித்து அண்ணாமலை இதுவரை யாரிடமும் பேசவில்லை. நாங்களும் இது குறித்து அவரிடம் பேசவில்லை. பொதுவாக எப்போதும் போல கட்சி ரீதியாக நாங்கள் அவருடன் பேசிக்கொண்டிருக்கிறோம். சிறிய விஷயத்தைக்கூட பெரிய விஷயமாகக் காட்டுவது நமது ஊடகங்கள்தான்" என தெரிவித்தார்.

இரண்டு நாட்களில் பேசுவதாக அண்ணாமலையே கூறி இருந்தாரே என்ற கேள்விக்கு, "அப்படியானால் நீங்கள் அது குறித்து அவரிடம்தான் கேட்கவேண்டும்" என நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

அண்ணாமலை ராஜினாமா கடிதம் கொடுத்துள்ளாரா என்ற கேள்விக்கு, "மாநிலத் தலைவர் என்ற முறையில் இதுவரை என்னிடம் எந்த கடிதமும் வரவில்லை. ராஜினாமா தொடர்பாக இதுவரை அவர் என்னிடம் எதுவும் பேசவில்லை. கட்சி விவகாரம், குடும்ப விவகாரம் குறித்து நாங்கள் பேசிக்கொள்கிறோம். தேர்தலின்போதுகூட அண்ணாமலை தனி ஹெலிகாப்டரில் எல்லா தொகுதிகளுக்கும் சென்று பிரச்சாரம் செய்தார். எனவே, "எங்களுக்குள் கருத்து வேறுபாடு எதுவும் இல்லை" என நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

முதல்வர் விஜய்யின் செயல்பாடு" எவ்வாறு இருக்கிறது என்ற கேள்விக்கு, "முதல்வராக பதவியேற்ற பிறகு நன்றி தெரிவிப்பதற்காக விஜய் திருச்சி வந்திருந்தார். முன்னதாக சட்டப்பேரவையில் பேசும்போது, பெரும்பான்மை இல்லாவிட்டாலும், எங்கள் அரசு சிறுபான்மைஅரசு என அவர் கூறினார். இது சிறுபான்மை அரசா, சிறுபான்மையினர் அரசா என்பது குறித்து அவர் விளக்க வேண்டும்.

சென்னை அண்ணா சாலையில் உள்ள மின்சார வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் இருந்து ஹார்ட் டிஸ்க் காணாமல் போய்விட்டதாகக் கூறுகிறார்கள்.டெண்டர்விட்டதில்ரூ.400கோடிக்கும் மேல்ஊழல்என்கிறார்கள்.திமுகஆட்சிபோய்விட்டது. தவெக ஆட்சியில் உள்ளது. இப்போது இதுபோன்று நடக்கிறது "என்றால் அதற்கு யார் பொறுப்பேற்க வேண்டும்" என குறிப்பிட்டார்.

### சுரண்டை சுற்றுவட்டார விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கை:

## இரட்டை குளம் கால்வாய் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அமைச்சர் N. ஆனந்திடம் தென்காசி மத்திய மாவட்ட கழகச் செயலாளர். JAS.ராஜபிரகாஷ் மனு!



சுரண்டை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், கடந்த ஆட்சியில் கைவிடப்பட்ட "இரட்டை குளம் கால்வாய் திட்டத்தை" மீண்டும் விரைந்து செயல்படுத்தக் கோரி, தென்காசி மத்திய மாவட்ட கழகச் செயலாளர் திரு.JAS.ராஜபிரகாஷ் அவர்கள், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்

திரு.N.ஆனந்த் அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தார்.

தலைநகர் சென்னையில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்று மாவட்ட கழகச் செயலாளர் JAS.ராஜபிரகாஷ் அமைச்சரிடம் விரிவாக எடுத்துக் கூறினார்.

மனுவை கனிவோடு பரிசீலித்த மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் எஸ்.ஆனந்த் அவர்கள், இத்திட்டத்தின் அவசியத்தை உணர்ந்து, இரட்டை குளம் கால்வாய் திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கான பணிகள் உடனடியாகத் தொடங்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

### பெரியகுளம் அருகே உள்ள சில்வார்பட்டி அரசு மாதிரி பள்ளியில்

## முதல் மதிப்பெண் எடுத்து மாணவ மாணவிகளின் சாதனை ஆசிரியர்கள் பாராட்டு மற்றும் பரிசு வழங்கல்

தேனி மாவட்டம், சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் அண்மையில் நடை- சாதனை படைத்துள்ளனர்.

இதில் மூன்றாம் இடம் பிடித்த மாணவி தாட்சா- னும் தீவிரமாகப் படித்து, மாநில அளவில் முதலிடம் பிடித்து பள்ளிக்கும், மாவட்டத்திற்கும்



பெற்ற தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்து சாதனை படைத்த மாணவ மாணவிகளுக்கு, பள்ளியின் உதவித்தலைமைஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து சிறப்புப் பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கிப் பாராட்டினர்.

இப்பள்ளியில் பயிலும் மாணவிகளில் முதல் பரிசு - மாணவி ஜீவதர்ஷினி

இரண்டாம் பரிசு - மாணவி பரணி

மூன்றாம் பரிசு - மாணவி தாட்சாயினி ஆகியோர் பெற்று

யினி, 'நியூஸ் 7 தமிழ்' தொலைக்காட்சியின் தேனி மாவட்ட ஒளிப்பதிவாளரின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவிகளின் உறுதிமொழி

வெற்றி பெற்ற மாணவிகளுக்கு ஆசிரியர்கள் நேரில் பரிசு வழங்கி ஊக்கப்படுத்தியது, பள்ளியின் மற்ற மாணவ மாணவிகளுக்கும் ஒரு சிறந்த முன்மாதிரியாகவும், உத்வேகமாகவும் அமைந்தது. பரிசுகளைப் பெற்றுக்கொண்ட மூன்று மாணவிகளும், "இனிவரும் காலங்களில் இன்- பெருமை சேர்ப்போம்" என்று ஆசிரியர்களிடம் நெகிழ்ச்சியுடன் உறுதி கூறினர்.

இந்தபள்ளியின் சிறப்பம்சம்

சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியானது, கல்வி மட்டுமின்றி தேனி மாவட்டத்தில் நடைபெற்ற ஏராளமான பல்வேறு போட்டிகளிலும் பங்கேற்று, பல்வேறு சிறப்புப் பரிசுகளையும் பாராட்டுகளையும் தொடர்ந்து பெற்று சாதனைப் பட்டியலை நீட்டித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## போக்குவரத்து காவலர்களுக்கு குளிரூட்டும் கண்ணாடிகள் மற்றும் கையுறையை குமரி எஸ்.பி. ஸ்டாலின் வழங்கினார்



கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுமக்களின் பாதுகாப்பிற்காக வெயில், மழைபாராமல் சாலைகளில் பணியாற்றும் போக்குவரத்து காவலர்களின் நலனை கருத்தில் கொண்டு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர். ஸ்டாலின் முன்னெடுப்பில் அகர்வால் கண் மருத்துவமனை மற்றும் கேப் ஸ்டார்ட் நிறுவனத்தின் பங்களிப்புடன் அனைத்து போக்குவரத்து காவலர்களுக்கும் குளிரூட்டும் கண்ணாடிகள் மற்றும் கையுறைகள் வழங்கப்பட்டன. கன்னியாகுமரி மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, காவலர்களின் உடல்நலன் மற்றும் பணித்திறனை மேம்படுத்தும் மனிதநேய முயற்சியாக அமைந்தது. காவலர்களின் நலனில் தொடர்ந்து அக்கறை செலுத்தி வரும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இந்த நடவடிக்கைக்கு காவல்துறை வட்டாரங்களும் பொதுமக்களும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர். இந்நிகழ்ச்சியில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தடுப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர். பாலசுப்பிரமணியன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையகம். கலையரசன், நாகர்கோவில் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர். இளஞ்செழியன், ஆயுதப்படை துணை காவல் கண்காணிப்பாளர். கோவிந்தராஜு மற்றும் காவலர்கள் உடன் இருந்தனர்.

## குளுகுளு காற்று இதமான சாரல் மழையுடன் குற்றாலத்தில் சீசன் களைகட்டத் துவங்கியுள்ளது

### அருவிகளில் ஆர்ப்பரித்து கொட்டும் நீர் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி



தென்காசி மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலை பகுதியில் புகழ் பெற்ற சுற்றுலா ஸ்தலமான குற்றாலம் அமைந்துள்ளது.

இங்கு குற்றாலம் மெயின் அருவி, ஐந்தருவி, புலியருவி, மற்றும் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சிற்றருவி, பழைய குற்றால அருவிகள் அமைந்துள்ளது.

ஆண்டுதோறும் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய 3 மாத காலம் சீசன் காலமாகும். அப்போது அருவியில் ஆர்ப்பரித்து கொட்டும் அருவி நீரில் தமிழகம் மட்டுமல்லாது பிற மாநிலங்கள், வெளிநாட்டினர் என பல லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகை தந்து குளித்து மகிழ்வார்கள்.

தமிழகத்தின் அண்டை மாநிலமான கேரளாவில் தென்மேற்கு பருவ மழை தொடங்கியுள்ளதால், தென்காசி மாவட்டத்திலும் தென்மேற்கு பருவமழை துவங்கியுள்ளது.

இதனால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மேற்குத் தொடர்ச்சி மலை வனப்பகுதியிலும் குளுகுளு காற்றுடன் இதமான சாரல் மழை பெய்து வருகிறது.

குற்றால அருவிகளில் தண்ணீர் வரத்துவங்கியிருக்கிறது.

குற்றாலம் பகுதிகளில் இன்று இதமான சாரல் மழை விட்டு விட்டு பெய்து வரும் நிலையில் குற்றாலம் மெயின் அருவி, ஐந்தருவிகளில் நீர்வரத்து தொடங்கி இருக்கிறது.

ஐந்தருவியில் 4 கிளைகளில் தண்ணீர் விழுந்து வரும் நிலையில் அங்கு குளிப்பதற்காக சுற்றுலா பயணிகள் கூட்டம் கூட்டமாக படையெடுத்து வருவதுடன் அருவி நீரில் உற்சாகமாக குளித்து வருகின்றனர்.

இதே போன்று குற்றாலம் மெயின் அருவியில் சீரமைப்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதால் அருவிக்கரை மூடப்பட்டு சுற்றலா பயணிகள் குளிப்பதற்கு அனுமதிக்கப்படாத நிலை இருந்து வருகிறது.

இந்நிலையில் இன்று குற்றாலம் மெயின் அருவியிலும் நீர்வரத்து துவங்கி உள்ளது.

அருவிக்கரை பகுதியில் சீரமைப்பு பணிகள் இன்னும் முழுமை பெறாததால் அங்கு பொதுமக்கள் குளிக்க அனுமதிக்கப்படவில்லை.

குற்றாலத்தில் இன்று சீசன் துவங்கிய நிலையிலும் ஐந்தருவி மற்றும் சிற்றருவிகளில் மட்டுமே குளிக்க முடியும் என்பதால் அங்கு சுற்றுலாபயணிகள் கூட்டம் படையெடுத்து அருவியில் உற்சாகமாக குளித்து வருகின்றனர்

## முதலமைச்சர் விஜயின் தலைமையில் தமிழகம் சரியான திசையில் பயணிக்கிறது கூட்டணி கட்சிகளை அரவணைக்கும் அரசை வரவேற்கிறோம்

### அமைச்சர் ஏ.எம். ஷாஜகான் தென்காசியில் பேட்டி



தென்காசி மாவட்டத்தில் பல்வேறு கட்சி நிகழ்ச்சிகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்களில் பங்கேற்பதற்காக வருகை தந்த சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஏ.எம்.ஷாஜகான், தென்காசி நகர பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோது பேசிய அவர் தெரிவித்தாவது.

தமிழகத்தில் மக்கள் விரும்பிய மாற்றத்தின் அடிப்படையில் தற்போதைய அரசு சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும், நல்லிணக்கம், சட்டம்-ஒழுங்கு, பெண்கள் நலம் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகள் ஆகியவற்றை பாதுகாக்கும் நோக்கத்துடன் முதலமைச்சர் விஜய் தலைமையிலான அரசு சரியான திசையில் பயணித்து வருவதாகவும் கூறினார்.

வரும் ஜூன் 5ஆம் தேதி தலைமைச் செயலகத்தில் முதல் அமைச்சரவை கூட்டம் நடைபெற உள்ளதாகவும், அதில் சட்டமன்ற கூட்டத்தொடர், பட்ஜெட் கூட்டத்தொடர் மற்றும் மக்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட உள்ளதாகவும் மேலும், வரவிருக்கும் பட்ஜெட்டில் மக்கள் எதிர்பார்க்கும் பல்வேறு நலத்திட்ட அறிவிப்புகள் இடம்பெறும் என்ற நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார்.

தமிழக வெற்றி கழக கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவி ஒதுக்கப்பட்டிருப்பதை வரவேற்றவர் கூட்டணி கட்சிகளுக்கு மரியாதை அளிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது என்றும், அதற்காக முதலமைச்சருக்கு கூட்டணி சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார்.

தேர்தல் பிரச்சார காலத்திலேயே அனைத்து கட்சிகளும் பங்கேற்கும் கூட்டணி ஆட்சி அமையும் என முதலமைச்சர் உறுதியளித்திருந்தார் என்றும், அதனை செயல்படுத்தும் வகையில் அமைச்சரவையிலும், தற்போது மாநிலங்களவையிலும் கூட்டணி கட்சிகளுக்கு உரிய இடம் வழங்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க நடவடிக்கை என்றும் குறிப்பிட்டார்.

ஹஜ் பெருநாளை முன்னிட்டு நடைபெறும் குர்பானி தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது, குர்பானி வழங்குவதில் எந்த விதமான தவறும் நடைபெறவில்லை என்று அமைச்சர் விளக்கம் அளித்தார்.

இடைத்தேர்தலில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் போட்டியிடுமா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், வரும் 20ஆம் தேதி சென்னையில் மாநில பொதுக்குழு கூட்டம் நடைபெற உள்ளதாகவும், அதில் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைமை நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னரே முடிவு அறிவிக்கப்படும் என்றும், தற்போது வரை எந்த ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

மேலும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி கடந்த 75 ஆண்டுகளாக பல்வேறு அரசியல் கட்சியின் கூட்டணிகளில் பங்கேற்ற வரலாறு கொண்ட கட்சி என்றும், தற்போதைய அரசின் செயல்பாடுகளில் ஊழலற்ற நிர்வாகம், பெண்கள் உரிமை பாதுகாப்பு மற்றும் சிறுபான்மையினரின் நலன் ஆகியவற்றில் முதலமைச்சர் உறுதியான நிலைப்பாட்டை வெளிப் படுத்தியிருப்பதாகவும் கூறினார்.

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், புதிய அரசு பொறுப்பேற்று பத்து நாட்களே ஆகியுள்ள நிலையில், காவல்துறையில் முக்கிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், குற்றப் பின்னணி கொண்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், வரும் நாட்களில் சட்டம் தனது கடமையை இன்னும் சிறப்பாக செய்யும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மதுரை திருப்பரங்குன்றம் மலை விவகாரம் தொடர்பாக

## மதுரை உயர்நீதிமன்ற உத்தரவுபடி DGPS நவீன அளவீடு கருவி மூலம் அளவிடும் பணி துவங்கிய மத்திய தொல்லியல் துறை

மத்திய தொல்லியல் துறை பொறியாளர் உமேஷ் தலைமையில் 7 நாட்கள் திருப்பரங்குன்றம் மலை மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதியில் அளவிடும் பணி இன்றுடன் நிறைவு பெற்றது திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்றும் விவகாரம் தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டது.

இந்த சர்ச்சையான நிலையில் தீபதூண் தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது.

திருப்பரங்குன்றம் மலையில் மத்திய தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும் மலையை சுற்றியுள்ள ஆக்கிரமப்புகளை அகற்ற வேண்டும் மலையில் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என கே.கே. ரமேஷ் என்பவர் கடந்த ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்து இருந்தார். இந்த வழக்கு தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில் கடந்த மாதம் இந்த வழக்கு நீதிபதிகள் ஜி ஆர் சுவாமிநாதன், ஸ்ரீமதி முன்னிலையில் கடந்த மாதம் விசாரணை நடைபெற்றது.

திருப்பரங்குன்றம் மலை முழுவதையும் மத்திய தொல்லியல் துறை ஆய்வு செய்ய வேண்டும் முழு ஆய்வு நடத்திய அதன் அறிக்கையை மே மாதம் இறுதிக்குள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

இதனை தொடர்ந்து கடந்த 21 ந் தேதி திருப்பரங்குன்றம் மலையை அளவீடு செய்வதற்காக மத்திய தொல்லியல் துறை பொறியாளர் உமேஷ், திருமங்கலம் கோட்டாட்சியர் சிவஜோதி, வருவாய் துறையினர் நில அளவைபிரிவு அதிகாரிகள் திருப்பரங்குன்றம் காவல்துறை பாதுகாப்புடன் திருப்பரங்குன்றம் மலைக்குச் செல்லும் பழனியாண்டவர் கோவில் தெரு, கோட்டை தெரு, கோடாங்கிதோப்பு மற்றும் மலையை சுற்றி அளவீடும் பணியினை தொடங்கி உள்ளனர்.



7 நாட்களுக்கு இந்த அளவீடு பணிகள் நடைபெற்று வருகிறது

.DGPS என்ற நவீன அளவீடு கருவி மூலம் அளவீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. திருப்பரங்குன்றம் மலையில் மத்திய தொழில் துறையினர் நடத்திய ஆய்வு செய்யும் பணி இன்றுடன் நிறைவுபெற்றது.

நீதிமன்ற உத்தரவின்படி அளவிடும் பணியை மத்திய தொல்லியல் துறையினர் மற்றும் வருவாய்த் துறையினர் மேற்கொண்ட நிலையில் தற்போது பணி நிறைவு பெற்றுள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது.

# குமாரபாளையத்தில் 200 பெண்கள் 200 குழந்தைகள் கௌரவிக்கப்பட்ட பிரம்மாண்ட விழா



குமாரபாளையம் லிட்டில் ஹேண்ட்ஸ் சாரிட்டபிள் டிரஸ்ட் மற்றும் லிட்டில் ஹேண்ட்ஸ் லிட்டில்ட்ரீம்ஸ்அமைப்பின் சார்பில், பெண்களின் சாதனைகளையும் மாணவர்களின் திறமைகளையும்பாராட்டும் வகையில் நடைபெற்ற *தங்க மங்கை விருதுகள் 2026* மற்றும் *ஜூனியர் எக்ஸலன்ஸ் விருதுகள் 2026*விழா,குமாரபாளையம் ஸ்ரீ லட்சுமி மஹாலில்சிறப்பாகநடைபெற்றது.இவ்விழாவில்கல்வி, தொழில், சமூக சேவை, தொழில்முனைவு, கலை, விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சாதனை படைத்த *200 பெண்களுக்கு தங்க மங்கை விருதுகள்* வழங்கப்பட்டன. மேலும் கல்வி,அறிவியல்,இலக்கியம், கலை, விளையாட்டு உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்கிய *200 குழந்தைகளுக்கு ஜூனியர் எக்ஸலன்ஸ் விருதுகள்* வழங்கி கௌரவிக்கப்பட்டது.

விழாவில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த சிறப்பு விருந்தினர்கள், சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு விருது பெற்றவர்களை பாராட்டினர். நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த லிட்டில் ஹேண்ட்ஸ் சாரிட்டபிள் டிரஸ்டின் நிறுவனர் திருமதி பூங்கொடி உதயகுமார் பேசுகையில், சாதனையாளர்களை அடையாளம் கண்டு கௌரவிப்பது மேலும் பலருக்கு ஊக்கமாக அமையும். குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் இந்த விழா நடத்தப்படுகிறது என்றார். விழாவில் கலாச்சார நிகழ்ச்சிகள், சிறப்பு உரைகள் மற்றும் பாராட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்ட இவ்விழா மிகுந்த உற்சாகத்துடனும் சிறப்புடனும் நிறைவடைந்தது.

### கோயம்புத்தூர் சின்னியம் பாளையம் பகுதியில் உள்ள

# அரசு மேல்நிலைப்பள்ளியில் மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகள் தொடக்க விழா



கோயம்புத்தூர் சின்னி யம்பாளையத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று மா ணவர்களின் நலன் கருதி, மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகள் தொ டக்க விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கோ வை சின்னியம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இன்று இந்தத் தொடக்க விழா நடை பெற்றது.

பள்ளியின் உள்கட்டமைப்பு மற்றும் மாணவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட இந்த மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளை, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ராயல்கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிட்டல் தலைவரும், நிர்வாக இயக்குநரும், மற்றும் உயிரின் சுவாசம் அறக்கட்டளையின் நிறுவனருமான Dr. க. மாதேஸ்வரன், M.Ch., அவர்கள் முறைப்படி தொடங்கி வைத்தார்."சுற்றுப்புறத் தூய்மை!! ஆரோக்கிய வாழ்வு!!" என்ற உன்னத நோக்கத்தோடு, பள்ளி மாணவர்களிடையே தூய்மையையும் நல்வாழ்வையும் ஊக்குவிக்கும் வகையில் இந்த வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. இவ்விழாவில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ராயல்கேர் மருத்துவமனை ஊழியர்கள் பலர் கலந்துகொண்டனர்.



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகி தமிழக வெற்றிக் கழகத்தில் கிருஷ்ணகிரி கிழக்குமாவட்டகழகசெயலாளர்முரளிதரன்முன்னிலையில்முன்னாள்மாவட்டகழகசெயலாளர்தென்னரசுஊத்தங்கரை முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் தேவேந்திரன் கூட்டுறவு சங்க தலைவர் பண்ணந்தூர் பழனிசாமி இளைஞர் அணி இணைச் செயலாளர் வெற்றிவேல் கிளைக் கழகச் செயலாளர் மணிகண்டன் ஆகியோர் தமிழக வெற்றி கழகத்தில் இணைந்தனர்



தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் ராஜீவ் (03.06.2026) அன்று ஈரோடு ஆர்.என்.புதூரில்இயங்கிவரும்தனியார்டெக்ஸ்டைல்பிராசஸிங்நிறுவனத்தைபார்வையிட்டு,ஆய்வுமேற்கொண்டார். உடன்ஈரோடுமேற்குசட்டமன்றஉறுப்பினர்கா.க.ஆனந்த்மோகன்,மொடக்குறிச்சிசட்டமன்றஉறுப்பினர்டி.சண்முகன், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் என்.ராஜ்குமார் உட்பட பலர் உள்ளனர்.



சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் ராஜீவ் (03.06.2026) அன்று ஈரோடு, பெருந்துறை சிப்காட் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பொது சுத்திகரிப்பு நிலையத்தினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன்ஈரோடுமேற்குசட்டமன்றஉறுப்பினர்கா.க.ஆனந்த்மோகன்,மொடக்குறிச்சிசட்டமன்றஉறுப்பினர்டி.சண்முகன், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் என்.ராஜ்குமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாநகர் மாணிக்கம்பாளையம் அனைத்து வணிகர்கள் சங்கத்தின் 8ஆம் ஆண்டு விழா சங்கத் தலைவர் கே.எஸ்.கலையரசன் தலைமையில் (03.06.2026) அன்று சங்கச் செயலாளர் வீ.பாலசுப்பிரமணி வரவேற்புரையுடன் நடைபெற்றது. தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத் துணைத் தலைவர் ப.திருமூர்த்தி வணிகர் சங்கக் கொடியை ஏற்றி விழாவை தொடங்கி வைத்தார்கள். சங்கத்தின் கடந்த ஆண்டு செயல் அறிக்கையை சங்க துணைப் பொருளாளர் யோ.கோயில்ராஜ் வாசித்தார்.சிறப்பு அழைப்பாளர்களாக பேரமைப்பின் மாவட்டத் தலைவர் இரா.க.சண்முகவேல், மாவட்டப் பொருளாளர் உதயம் பொ.செல்வம், மாவட்டத் துணைத் தலைவர் வேலா.ப.சா. சுந்தரராஜன், மாவட்டத் துணைச் செயலாளர் பி.மாதேஸ்வரன், கோவை மண்டல இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் மு.பாலகிருஷ்ணன், மாநகர பொருளாளர் ஜி.கமலஹாசன் மற்றும் ஈரோடு மாநகரில் உள்ள பேரமைப்பு இணைப்பு சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.இந்த நிகழ்வில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அ.லாரன்ஸ் ரமேஷ் தலைமையில் இளைஞரணி நிர்வாகிகள் கடந்த மாதம் நடந்த நீர்மோர் பந்தல் சிறப்பாக நடக்க உதவி புரிந்த மாவட்ட நிர்வாகிகளுக்கும் இணைப்பு சங்க நிர்வாகிகளுக்கும் நினைவு பரிசு வழங்கி நன்றி தெரிவித்தனர். மேலும் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் நினைவு பரிசு உடன் சைவ அசைவ விருந்து வழங்கப்பட்டது. சங்கப் பொருளாளர் ஐ.ஆனந்தராஜ் நன்றியுரைக்க விழா இனிதே நிறைவுற்றது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் பள்ளிகள் நேற்று (04.06.2026) திறக்கப்பட்டதைத் தொடர்ந்து அரச்சலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவியர்களுக்கு பள்ளிச்சீருடைகள், பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்களை வழங்கினார். உடன் முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.இ.மான்விழி உட்பட பலர் உள்ளனர்.

# குடிமேனஅள்ளி கிராமத்தில் நண்பர்கள் நற்பணி மன்றம் துவக்க விழா



கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்கு உட்பட்ட குடிமேனஅள்ளி கிராமத்தில் இளைஞர் மற்றும் விளையாட்டு திட்டங்கள் அமைச்சகம் மற்றும் நண்பர்கள் நற்பணி மன்றம் துவக்க விழா நடைபெற்றது இதைத் தொடர்ந்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது இந்த நிகழ்வில் மை பாரத் அமைப்பின் கிருஷ்ணகிரி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் சுரேந்தர், முன்னாள் ராணுவத்தினர், பிஜேபி பிரமுகர் தருமன், தமிழ் ஆசிரியர் செந்தில், உதவியாளர் குமரேசன், மன்ற தலைவர் வீரபாண்டியன் துணைதலைவர் திருப்பதி, செயலாளர் துளசிமணி,துணைசெயலாளர் :பெருமான், பொருளாளர் இளையராஜா, நிர்வாக குழு உறுப்பினார்கள் உமாபதி,பார்த்திபன், கலைச்செல்வன், ஜெயக்குமார், ஸ்ரீ சிவசக்தி மன்ற உறுப்பினர்கள்: அன்பழகன், ரங்கபெருமாள், விஜயகுமார், தமிழரசு,பாரத் சிவா, முருகன்,பார்த்திபன், தண்டபாணி,ஜானகிராமன்,கோகுல், பூவரசன் ரகுவீரன், ஸ்ரீராமகிருஷ்ணன், லோகேஷ், ஜானகிராமன், நவீன்குமார், மோகன் தாமேதிரன், மணிமோகன், நவீன்ராஜ்,கீர்த்திவாசன், மற்றும் ஊர் பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





தமிழ்நாடுசுற்றுச்சூழல்மற்றும்காலநிலைமாற்றத்துறைஅமைச்சர்ராஜீவ் (03.06.2026) அன்றுஈரோடு,பெருந்துறை அருகில்இயங்கிவரும்தனியார்ஆயில்தயாரிக்கும்நிறுவனத்தைபார்வையிட்டு,ஆய்வுமேற்கொண்டார். உடன்ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த்மோகன், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் என்.ராஜ்குமார் உட்பட பலர் உள்ளனர்.

# War, truce, repeat: Despite ceasefire, Israel continues strikes on Lebanon

*A day after Israel and Lebanon agreed to a ceasefire in Washington, Israel launched fresh attacks on southern Lebanon on Thursday. As per Israeli Defence Minister Israel Katz, the ceasefire deal, brokered by the US, grants the military the "freedom" to strike Beirut if Hezbollah attacks Israeli communities.*

*The Israeli defence minister also added that the operations in southern Lebanon would continue. Track latest updates on Iran-US war*



*A UN peacekeeper was reportedly killed on Thursday, while two others were injured. The casualties took place when mortar shells hit his position near Marjayoun in southeastern Lebanon on late Wednesday, the UN peacekeeping mission UNIFIL was quoted as saying by news agency Reuters.*

*Several people were injured after an Israeli drone targeted a vehicle despite a ceasefire in place, Al Jazeera reported. Before the truce was announced, Hezbollah reportedly said it launched a "salvo of rockets" at Israeli soldiers in southern Lebanon's Qantara and launched drones towards troops near the strategic Beaufort Castle, occupied by Israel last week.*

*The fresh round of attacks also comes after a heated phone call between US President Donald Trump and Israeli prime minister Benjamin Netayahu over Israel's expansion of military operations in Lebanon."The IDF will, at this stage, continue its fire and ground operations, remain in the security zone in Lebanon up to the Yellow Line -- including in the Beaufort area -- and without the return of the population, while continuing to dismantle terrorist infrastructure on the ground," Katz was quoted as saying by AFP.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.